செய்திக் குறிப்பு எண் :- 56

நாள் :- 22.02.2013

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 22.2.2013

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், நின்னக்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. காசிநாதன் என்பவரின் மகன் திரு. பழனி 17.2.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் ஆலந்தூர் வட்டம், மீனம்பாக்கம் அருகே சென்று கொண்டிருந்த போது, மாநகர அரசுப் பேருந்து மோதியதில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், காங்கிரானந்தல் கிராமம் அருகே 18.2.2013 அன்று வேலூரிலிருந்து திருவண்ணாமலை சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து, எதிரே வந்த தனியார் பேருந்து மீது மோதியதில் அரசுப் பேருந்து ஓட்டுநர் திரு. சீனிவாசன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், எளாவூர் மதுரா செங்கல்சூளைமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வம் என்பவரின் மகன் மணி 18.2.2013 அன்று தனது மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த போது, துராப்பள்ளம் மதுரா திப்பம்பாளையம் என்ற இடத்தில் அறுந்து கிடந்த மின்சார வயரை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

சாலை விபத்துகளில் உயிரிழந்த பழனி மற்றும் சீனிவாசன், மின்சாரம் தாக்கி உயிரிழந்த மணி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9